**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.46/2022
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ராமச்சந்திரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of October 2023.

27.10.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 20.02.2022 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான், எனது மனைவி முனியம்மாள், மருமகளின் அண்ணன் செந்தில் ஆகிய 3 பேரும் எங்கள் தோட்டத்தில் பருத்திக்கு களை எடுத்துக்கொண்டிருந்தோம். அப்போது 1 ம் எதிரி கருமலைக்கண்ணன் எனது கேட்டின் முன்பாக வைத்திருந்த சிமெண்ட் சாக்கை எடுத்து சென்றார்.

2) அதற்கு நான் 1 ம் எதிரி கருமலைக்கண்ணன் ஏன் இவ்வாறு நான் இருக்கும்போது கேட்காமல் எடுத்து செல்கிறாய் என்று கேட்டேன். உடனே, 1 ம் எதிரி கருமலைக்கண்ணன் என்னடா தேவிடியா கூதி மகனே என்று கூறி கையால் எனது இடது கன்னத்தில் ஓங்கி குத்திவிட்டார். 2 ம் எதிரி ஹரிகரன் என்னை பார்த்து நீ என்ன பெரிய சுன்னியாடா என்று கூறி எனது இடது காலில் எட்டி எட்டி மிதித்தார். உடனே 2 எதிரிகளும் உன்னை பார்த்துக்கிறேன் கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள்.

3) அதோடு எனக்கு பலத்த காயம் ஏற்பட்டதால் ஆம்புலன்ஸ்யை வரவழைத்து பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் போலிசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.46/2022
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முனியம்மாள் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of October 2023.

27.10.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அசா.1 எனது கணவர் ஆவார். சென்ற வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை, காலை 11.30 மணியளவில் நான், எனது கணவர் அசா.1 ராமச்சந்திரன், எனது மருமகன் செந்தில் ஆகிய 3 பேரும் எங்கள் தோட்டத்தில் பருத்திக்கு களை எடுத்துக்கொண்டிருந்தோம். அப்போது 2ம் எதிரி ஹரிஹரன் எங்களது தோட்டத்தில் இருந்த சிமெண்ட் சாக்கை எடுத்து சென்றார்.

2) அதற்கு நானும், எனது கணவரும் 2ம் எதிரி ஹரிஹரனிடம் ஏன் எங்களிடம் கேட்காமல் சாக்கை எடுக்கிறாய் என்று கேட்டோம். அதற்கு உங்களிடம் நான் என்ன கேட்பது நான் எடுக்கதான் செய்வேன் என்று கூறினார். 2ம் எதிரி ஹரிஹரன், 1ம் எதிரி கருமலைக்கண்ணன் ஆகியோர் எனது கணவர் அசா.1யை தலையிலும், வலது காலிலும் தாக்கினார்கள். எனது கணவர் அசா.1 அடிபட்டதும் கீழே விழுந்துவிட்டார். 2ம் எதிரி ஹரிஹரன் உடனே பெரிய கல்லை எடுத்துக்கொண்டு எனது கணவர்

அசா.1ன் மேல்போடப்பார்த்தார். நான் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டதற்கு உன் கணவர் என்ன பெரிய மயிரா சுன்னியா என்று கேட்டார்.

3) பின்பு ஆம்புலன்ஸ்யை வரவழைத்து பரமக்குடி அரசு மருத்துவமனையில் எனது கணவர் அசா.1 யை சிகிச்சைக்கு சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.46/2022
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : செந்தில் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of October 2023.

27.10.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அசா.1 எனது மாமா ஆவார். கடந்த 20.02.2022ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் எனது தங்கையை பார்ப்பதற்காக எனது மாமா அசா.1ன் தோப்பிற்கு சென்றிருந்தேன். தோப்பில் சிமெண்ட் சாக்கு இருந்தது. 1ம் எதிரி கருமலைக்கண்ணனும், 2ம் எதிரி ஹரிஹரனும் எடுக்க வந்தார்கள். அதற்கு அசா.1 ராமச்சந்திரன் ஏன் எடுக்க வந்தீர்கள் என்று எதிரிகளை பார்த்து கேட்டார்.

2) உடனே 1ம் எதிரி கருமலைக்கண்ணன் ஏன்டா தேவிடியா கூதி மகனே என்று கூறி அசா.1யை ஒரே குத்தாக குத்தி கீழே தள்ளிவிட்டார். 2ம் எதிரி ஹரிஹரன் சுன்னி நீ என்ன பெரிய ஆளா என்று கூறி அசா.1யை கீழே தள்ளி வலது காலில் மாறி மாறி மிதித்தார். நாங்கள் சண்டையை விலக்கிவிட்டோம். பின்பு ஆம்புலன்ஸ்யை வரவழைத்து பரமக்குடி அரசு மருத்துவமனையில் அசா.1யை சிகிச்சைக்கு சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.